# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP No.189/2021 Date: 27.03.2025.

PW1-ஸ்ரீதேவி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே 13.03.2025 ல் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் உள்ள வரிசை எண். 1 முதல் 8 வரையான ஆவணங்கள் முறையே ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தின் போது என் கணவர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் மீது மோதிய லாரிக்கு தகுதி சான்றிதழ் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அதனால் எங்களுக்கு இழப்பீடு செலுத்த வேண்டிய கடமை 2 ம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் சொந்த வியாபாரம் செய்தார் என்பதை காட்ட நான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் என்னால் தாக்கல் செய்ய முடியும். என் கணவர் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த கணக்கையும் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என் கணவர் மாதம் ரூ.50 ஆயிரம் சம்பாதித்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-ஸ்ரீதேவி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.